DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 79 /2021
*****

Deposition of Witness for Prosecution witness No: PW - 11

LW - 13

Name : **சிவலிங்க சேகர்**

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : **06.01.2026**

1. **( Accused present)**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 31.05.2023 ம் தேதி காவல் துறை துணை கண்காணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 28.10.2016 ம் தேதி வாசுதேவநல்லூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியாற்றியபோது வாசுதேவநல்லூர் காவல் நிலைய சார்பாய்வாளர் திருமலைச்சாமி மற்றும் போலிசார் சகிதம் நிலையம் ஆஜராகி போலிசார், எதிரி சகிதம் காலை 10.00 மணிக்கு நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினைப் பெற்று எதிரியின் மீது நிலைய கு.எண்.209/2016 ச.பி 294(b),353,307 IPC r/w 25 (1)(A) Indian Arms Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சுமுதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 10** ஆகும். எதிரியிடம் விசாரிக்க தானாக முன் வந்து

எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள், காவலர்கள், பீமராஜா மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரியை அழைத்து சென்று 13.45 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தோட்டாக்கள் 68 ம் அவர் வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்ததை அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர் நிலையம் கொண்டு வந்து எதிரி மற்றும் வழக்கின் சொத்துக்களான ஏர் ரைபிள் ISW MOD 50 அதன் நீளம் சுமார் 46 இன்ஞ், பேரலின் நீளம் சுமார் 31 இன்ஞ் பட்டின் நீளம் சுமார் 15 இன்ஞ் உள்ளதையும் அதனோடு இருந்த 68 தோட்டாக்களையும் சேர்த்து இவ்வழக்கின் எதிரியை நீதிமன்றத்திற்கு தக்க வழி காவலுடன் அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் ராஜா, ஜெயபால் துரை, அய்யர், ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை ஆய்வு அறிக்கைப் பெற சிவகிரி நீதிமன்றம் மூலம் மனு தாக்கல் செய்தேன். இவ்வழக்கில் திரு. திருநாவுக்கரசு என்பவரை துப்பாக்கியை ஆய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்து 01.06.2017 அன்று காவலர் திரு.வெங்கடேஷ் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பப்பட்டு 22.09.2017 அன்று அவரை விசாரித்து ஆய்வறிக்கையை பெற்றேன். அன்று காவலர் வெங்கடேஷ் , பீமராஜா, பாலமுருகன், ராமானுஜ கண்ணன், சார்பு ஆய்வாளர் திரு. திருமலைச்சாமி என்பவர்களின் மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் திரு. விஜய ஆனந்த் தலைமை உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி அவர்களிடமிருந்து இந்த வழக்கின் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிக்கு உரிமம் வழங்கப்பட்டதா என்று வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு அதன் பேரில் மேற்படி தலைமை உதவியாளர் விஜய ஆனந்த் எதரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட உரிமம் இல்லை என்றும், அவர் மீது நடவடிக்கைக்கு அனுமதி அளித்த கடிதத்தைப் பெற்று அவரை விசாரித்தேன். பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அரசு உதவி வழக்கறிஞர்

கருத்தினைப் பெற்று எதிரி மீது 29.10.2017 ம் தேதி ச.பி 294(b),353,307 IPC r/w 25 (1)(A) Indian Arms Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் சிவகிரி நீதிமன்றத்தில்தாக்கல்செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனது விசாரணையின் படி 28.10.2016 ம் தேதி காலை 10.00 மணிக்குத்தான் வழக்கு குறித்து தகவல்கள் தெரியவந்தது. 10.00 மணிக்கு முன்பு நடந்த விவரங்கள் புகார் தாரர் அ.சா.1 என்னிடம் வந்து 10.00 மணிக்கு சொன்ன பின்னர் தான் தெரியும். இந்த வழக்கின் புகார் அச்சுமுதல் தகவல்அறிக்கை மற்றும் வழக்கின் விசாரணையில் , நிலைய பொது நாட்குறிப்பில் பதிவு செய்து விட்டு மேல் அதிகாரிகளுக்கு தகவல் தெரியப்படுத்திவிட்டு சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொது நாட்குறிப்பு எதையும் நான் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் விசாரிப்பதற்கு தனி அறை உள்ளதா என்றால் கைதிகளை வைத்திருப்பதற்கு அறை உள்ளது ஆனால் விசாரிப்பதற்கு என்று தனி அறை இல்லை. எங்களது நிலையத்தில் உள்ள கைதிகளை வைத்திருப்பதற்கான அறையில் வைத்து தான் எதிரியை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். இந்த ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற போது நானும், காவலர்கள் பீமராஜா, பாலமுருகன், ஆகிய இருவர் மட்டும் தான் அந்த அறையில் இந்தோம் என்றால் சரியல்ல. அந்த அறையில் எங்களுடன் உதவி ஆய்வாளர் திருமலைச்சாமி என்பவரும் வழக்கு விசாரணைக்கு உதவியாக இருந்தார். எதிரியை விசாரிக்க கைது வைத்திருப்பு அறை ஒரு அறைக்கு வெளியே இருந்து பார்க்கும் அளவிற்கு இருக்கும் என்றால் சரியல்ல. அது பார்க்கும் போது பகுதியாக தெரியும். எதிரியின் வீட்டுக்கு முன்பாக உள்ள ஆடு கொட்டகையானது என்ன கூரை அமைக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது விசாரணையிலும் ஆட்டு கொட்டகையின் கூரை எந்த விதமானது என்று கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களின் வாக்குமூலத்திலோ ஜெயகுரு, ராஜா, ஜெயபால்துரை, அய்யர், ஆகியோர்களின் பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் சொல்லப்பட்டுள்ள வயல் வேலைக்கு செல்வோர்களையோ, ஆடு, மாடு மேய்ப்பவர்களையோ இந்த வழக்கில் நான்

சாட்சியாக விசாரிக்கவில்லை. மாதிரி வரைபடத்தில் நந்தவன தெரு என்ற ஒரு தெருவை சுட்டிக் காட்டவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நந்தவன தெரு இருப்பதாக மாதிரி வரைபடத்தில் துலங்காது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்திலோ, பார்வை மகஜரிலோ, இராமநாதபுரம் கூடலூர் மெயின் ரோட்டில், டீ கடை, பலசரக்கு கடை இருப்பதாக் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது பார்வை மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தேவாலயம், வீடுகள் அவற்றை சார்ந்த நபர்கள் யாரையும் இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின், புகார், அச்சுமுதல் தகவல் அறிக்கை மற்றும் வாக்குமூலங்களில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் துப்பாக்கியின் நிறம் மற்றும் நீளம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் நாட்டு துப்பாக்கி எதையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையின் எந்த இடத்திலும் நாட்டு துப்பாக்கியை கைப்பற்றியதாக சொல்லப்படவில்லை. நான் கைதி வைத்திருக்கும் அறையில் வைத்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் நான்கு பேரில் யார் எழுதியது என்றால் சரியல்ல. உடன் இருந்த காவலர் பீமராஜா அதே இடத்தில் தட்டச்சு செய்தார். நான் சொல்வது போல் பீமராஜா ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் குண்டுகள் வெடிக்கக்கூடியதில்லை என்றால் அது வெடிக்கக்கூடியது. அந்த குண்டுகளில் குறைந்த அளவு வெடிமருந்து உள்ளது. குண்டுகளை பரிசோதனைக்கு அனுப்பினேன். ஆய்வு அறிக்கையில் வெடிமருந்துடன் கூடிய குண்டு என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த படிவம் 95 ல் குண்டுகள் வெடிமருந்துடன் கூடியது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. காற்று துப்பாக்கியில் பயன்படுத்தப்படும் குண்டுகள் இரும்பு அல்லது அலுமினியத்தில் தயார் செய்யப்பட்டிருக்கும் அதில் வெடிமருந்து கிடையாது என்றால் சரிதான். காற்று துப்பாக்கிகள் சந்தையில் கிடைக்கும் என்றால் சரிதான். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் துப்பாகியில் கைரேகை எதையும் பரிசோதிக்கப்பட்டதா என்றால் இல்லை. அந்த துப்பாக்கியில் வெடிமருந்து பயன்படுத்தப்பட்டதா என்று கண்டறிய வேதியியல் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு பதியப்பட்ட பின்பு தான் படைக்கல சட்டப்பிரிவின் படி வழக்கு பதிவு செய்ய அனுமதி

கேட்டு கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேல் விசாரணை செய்ய அனுப்பப்பட்டது. நான் சொன்ன நாள், நேரத்தில் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்ததாகவும், விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, மாதிரி வரைபடம், பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி தயார் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது உண்மைஇல்லை என்றால் சரியல்ல. இவை அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லப்படக்கூடிய துப்பாக்கி இந்த எதிரிக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குண்டுகள் எதிரியால் ஒப்படைக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் துப்பாக்கி மற்றும் குண்டுகள் யாரிடமிருந்து வாங்கப்பட்டது என விசாரணை செய்து அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதா என்றால் அவசியம் இல்லாததால் அதைப் பற்றி விசாரிக்கவில்லை. இந்த வழக்கு எதிரி ஏற்கனவே குற்ற சரித்திர பதிவேட்டில் இருப்பதால் புள்ளி விவரத்திற்காக பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ளது போல் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள ஆயுதங்களுக்கு எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றாலும், இந்த வழக்கு பொய்யாக புனையப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அதனால் தான் இந்த வழக்கில் அனைத்து சாட்சிகளும் காவலர்களே சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளார்கள் என்றாலும், மூன்றாவது நபர் சாட்சியாக காட்டப்படவில்லை என்றாலும் சரியல்ல. எனது விசாரணை ஒருதலைப்பட்சமானது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை**

(Sd/-P.Mahindra Varma)
Subordinate Judge,
Sankarankovil.